அமாவாசை தர்பணம் விவரம்.

அமாவாசை தர்பணம் செய்ய வேண்டிய சரியான நேரம் காலை சுமார் 11-30 மணிக்கு ..தற்காலத்தில் வேலைக்கு செல்ல வேண்டி உள்ளதால் காலை 8-30 மணிக்கு செய்யலாம். இதற்கும் முன்பாக செய்து ப்ரயோஜனமில்லை.

மாத்யானிகம் செய்துவிட்டு தான் தர்பணம் செய்ய வேண்டும்.

திருமணமானவர்கள் தினமும் காலை ஸ்நானம் செய்துவிட்டு மாத்யானிக ஸ்நானம் செய்ய வேண்டும்.. முடியாதவர்கள், தர்பண, சிராத்த தினங்களில் மாத்யானிக ஸ்நானம் செய்ய வேண்டும் .இதுவும் முடியாதவர்கள் ஈர துணியால் உடல் முழுவதும் துடைத்துக்கொள்ளவும்.

பித்ருக்களுக்கு முதலில் செய்து விட்டு பிறகு தான் பூஜை செய்ய வேண்டும்.

பித்ருக்களுக்கு தர்பணம் செய்த எள்ளும் ஜலமும் யார் காலிலும் படக்கூடாது., மற்ற ப்ராணிகள் சாப்பிடக்கூடாது. கருப்பு எள் முளைக்க கூடாது.

தர்பணம் செய்த தர்பைகளை தீ வைத்து கொளுத்தலாம் அல்லது ஓடும் தண்ணீரில் போடலாம். மழை நீர் சேகரிப்பு தொட்டிக்குள் சேர செய்யலாம்.

வெளியூர் செல்ல நேர்ந்தாலும் வெளியூரிலும் மாலை ஐந்து மணிக்குள் செய்யலாம்.

பித்ரு தர்பணம் கருப்பு எள்ளு கொண்டே செய்க. செவ்வாய், வெள்ளி, ஞாயிறு கிழமைகளிலும் பிறந்த நக்ஷத்திரத்தன்றும் நாந்தி சிராத்தம் செய்த பிறகு மூன்று மாதங்களிலும் எள்ளுடன் பச்சரிசி கலந்து தர்பணம் செய்ய வேண்டும்.

TamilBrahmins.com

நாந்தி சிராத்தம் செய்த பிறகு மூண்று மாதங்களுக்கு தர்பைக்கு பதில் அருகம் புல் கூர்ச்சம், பவித்ரம். கட்டைபுல் செய்து தர்பணம் செய்ய வேண்டும்.

தர்பணம் செய்யும் போது ஒவ்வொரு தடவையும் தர்பயாமி என்று சொல்லும் போது உத்தேச மாக ஏழு அல்லது எட்டு எள் எடுத்து தண்ணீருடன் கூர்ச்சத்தின் நுனியில்  மறித்து விடவும்.

க்ரஹண தர்பணம் க்ரஹண காலத்தில் தான் செய்ய வேண்டும். அப்போது தீட்டு இருந்தாலும் தர்ப்பணம் செய்ய வேண்டும். மற்ற அமாவாசை , மாத பிறப்பின் போது தீட்டு இருந்தால் தர்பணம் செய்ய க்கூடாது.

நெற்றிக்கு இட்டு கொண்டு தர்பணம் செய்யும் வழக்கம்  பரம்பரையாக உள்ளவர்கள் மாத்திரம் நெற்றிக்கு இட்டு கொண்டு செய்யலாம்.

தர்பணம் செய்ய போகும் தாம்பாளம் மூன்று லிட்டர் தண்ணீர் பிடிக்கு மளவிற்கு இருத்தல் நலம். வெள்ளி அல்லது தாமிரம் ( செம்பு ) அல்லது பித்தளை தாம்பாளத்தில் தர்பணம் செய்தல் சாலச் சிறந்தது.

பஞ்ச கச்சம் வேட்டி திருமணமானவர்கள் கட்டிக்கொண்டு தான் தர்பணம் செய்ய வேன்டும்.அங்க வஸ்திரமும் இடுப்பில் இருக்க வேண்டும்.

கூர்சத்தில் குறைந்த பக்ஷம் 7 தர்பைகள் இருக்க வேண்டும் 32 அல்லது 16 அல்லது 9 அல்லது 7 தர்பைகள் தேவை ஒரு கூர்ச்சம் செய்ய,என்கிறது கபர்தி காரிகை.என்னும் புத்தகம்.

தந்தை இறந்த பிறகு வரும் கிரஹண தர்பணம் முதல் மாதா மாத தர்பணம் செய்ய வேண்டும், தந்தை இறந்த 15 நாட்களுக்கு மேல் தர்பணம் செய்ய ஆரம்பிக்கலாம்.

வருடத்தில் 96 தர்பணம் செய்பவர்களுக்கு ஒரே நாளில் இரு தர்பணம் செய்ய வேண்டி வரும். முதலில் ஒரு தர்பணம் செய்து முடித்து விட்டு தர்பணம் செய்த பாத்திரங்களை அலம்பி,

TamilBrahmins.com

Credits: www.tamilbrahmins.com

புதிதாக வேறு ஜலம் பிடித்து வந்து அடுத்த தர்பணத்தை ஸங்கல்பம் முதல் கடைசி வரை செய்து விட்டு ப்ருஹ்ம யஞ்க்யம் செய்யவும்.

ஷண்ணவதி என்றால் 96 என்று அர்த்தம். இது நித்ய கர்மாவில் சேர்ந்தது. எது வரை செய்கிறோமோ அது மட்டும் பலனும் உண்டு.. வருட பிறப்பு முதலோ அல்லது தாய், தகப்பனார் சிராத்தத்திற்கு பிறகு முதல் செய்ய ஆரம்பிக்கலாம்..ஒரு வருடம் செய்த பிறகு அடுத்த வருடம் முடியாவிட்டால்

தவறு கிடையாது. அமாவாசை, மாத பிறப்பு, மஹாளயம், பூர்வேத்யுஹு தர்பணங்கள் மட்டும் செய்யலாம். ஓய்வு பெற்றவர்கள் முடிந்த வரை ஷண்ணவதி தர்பணம் செய்யலாம்....

மாத பிறப்பு தர்பணங்கள் நைமித்திக கர்மா. கிரஹண தர்பணங்கள் காம்ய கர்மா..

ஒரு தர்பணத்திற்கு குறைந்த பக்ஷம் இரண்டு லிட்டர் தண்ணிர் தேவை பட வேண்டும்.,

சுக்ல யஜுர் வேதிகள் போதாயன அமாவாசை அன்று தர்பணம் செய்ய வேண்டும்.

தாயார் தகப்பனார் சிராத்தம் அமாவாசை அன்று வந்தால் முதலில் சிராத்தம் செய்து விட்டு  அமாவாசை தர்பணம் செய்து விட்டு பரேஹணி தர்பணம் செய்ய வேண்டும்..

பரேஹணி தர்பணம் மறுநாள் விடியர்காலையில் செய்தல் வேண்டும்.

31-08-2016 புதன் ஸர்வ அமாவாசை.

ஸ்ரீ துர்முகீ நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வருஷ ருதௌ சிம்ம மாசே க்ருஷ்ண பக்ஷே சதுர்தஸ்யாம் புண்ய திதௌ ஸௌம்ய வாஸர மகா நக்ஷத்ர சிவ நாம யோக சகுணி கரண யேவங்குண ஸகல விசேஷன விசிஷ்டாயாம் வர்த்தமானாயாம் சதுர்தஸ்யாம் புண்ய திதௌ  ( ப்ராசீநாவீதி )

TamilBrahmins.com

----------------கோத்ரானாம்--------------சர்மனாம் வசு ருத்ர ஆதித்ய ஸ்வரூபானாம் அஸ்மத் பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹானாம் ----------------------கோத்ரானாம்

நாம்னீனாம் வசு ருத்ர ஆதித்ய ஸ்வரூபானாம் அஸ்மத் மாத்ரு பிதாமஹி ப்ரபிதாமஹீனாம் ( தாயார் வர்க்கம் )----------------கோத்ரானாம்-----------------சர்மனாம் வசு ருத்ர ஆதித்ய ஸ்வரூபானாம் அஸ்மத் ஸ பத்னீக மாதாமஹ, மாதுஹு பிதாமஹ மாதுஹு ப்ரபிதாமஹானாம் உபய வம்ச பித்ருனாம் அக்ஷய த்ருப்தியர்த்தம் அமாவாஸ்ய புண்ய கால தர்ஸ சிராத்தம் தில தர்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

,.

TamilBrahmins.com

Credits: www.tamilbrahmins.com